DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -9

| | | |
|---|---|---|
| Name | : திரு. பழனிவேல் | Caste: |
| Father's Name: | திரு. நடராஜன் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 4th day of January -2024.

**A1 , A2, A5 to A9, A11, A13 to A18 present. A3 produced.**

**Date: 04.01.2024**

**முதல் விசாரணை**

நான் தற்போது அரியலூர் மாவட்டம் வங்குடிகிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். இவ்வழக்கில் கொலை செய்யப்பட்ட 5 நபர்களையும் எனக்கு தெரியும். அவர்கள் எனக்கு பங்காளி முறையாக வேண்டும். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்களும் எனது உறவுகாரர்கள் தான்.

16.05.2008 அன்று வெள்ளிக்கிழமை. அன்று காலை சுமார் 9.00 மணியவில் கோதுமை அரைப்பதற்காக எனது வீட்டிலிருந்து புறப்பட்டு வண்ணாங்குளத்தையும் தாண்டி கிழக்கு பக்கமாக உள்ள ரைஸ்மில்லுக்கு சென்றேன். அங்கு கோதுமை அரைப்பதற்கு சிறிது காலதாமதம் ஆகும் என்று தெரியவந்ததால் வீட்டிற்கு சென்று சாப்பிட்டுவிட்டு வரலாம் என்று முடிவு செய்து நான் எனது வீட்டிற்கு திரும்ப வந்துகொண்டிருந்தேன்.

நான் திரும்ப வந்துகொண்டிருந்தபோது RSP தைலமரகாட்டின் வழியாக நான்

வந்துகொண்டிருந்தேன். அப்போது எதிரிகள் பிரபாகரன், பழனிசாமி, தினேஷ், ராஜதுரை, ஜவகர்பாபு, திருஞானம், காளிதாஸ் ஆகியோர் கைகளில் பட்டாகத்தி, வீச்சருவாள், ஈட்டி ஆகிய ஆயுதங்களுடன் வந்தார்கள். அவர்களது சட்டைகளில் ரத்தகரை இருந்தது.

நான் அவர்களை பார்த்து பயந்துகொண்டு தெருவுக்குள் சென்றேன். அங்கே ஊர்காரர்கள் என்னை பார்த்து உன் தம்பி பாரிவள்ளல் மகன் பிரபுவை வெட்டிவிட்டதாக சொன்னார்கள். நான் அலறிகொண்டு போய்பார்த்தபோது குருநாதன் வீட்டிற்கு எதிர்புறம் உள்ள பகுதியில் பிரபுவின் தலைஇல்லாத உடல் கிடந்தது. நான் மேற்கே சென்றபோது எதிரி பாஸ்கரன் வீட்டிற்கு அருகில் சுரேஷ் என்பவர் வெட்டுபட்டு விழுந்துகிடந்தார்.

காமராஜ் வீட்டிற்கும், ரேவதி வீட்டிற்கும் இடைப்பட்ட சந்துபகுதியில் மகாலிங்கத்தின் உடல் கிடந்தது. (சாட்சி தண்ணீர் குடித்து தன்னை ஆசுவாசப்படுத்திகொள்ளுகிறார். ) அதற்கு பக்கத்தில் ஒருவீடு தள்ளி உள்ள இடத்தில் தர்மலிங்கம், காசிநாதன், ஜானகி ஆகியோர் வெட்டுபட்டு கிடந்தார்கள். ஜானகி மட்டும் உயிருடன் இருந்தார். மற்ற இருவரும் இறந்துவிட்டார்கள்.

காளியம்மன் கோவில் பக்கத்தில் மேற்குபுறம் தேசிங்குபாலன் இறந்த இடத்தில் பிரபுவின் தலை கிடந்தது. காளியம்மன் கோவில் சூலத்தில் தர்மலிங்கத்தின் தலை செருகப்பட்டிருந்தது. நான் பதற்றம் அடைந்துவிட்டேன். அதற்குள்ளாக போலிசார் அங்கு வந்துவிட்டார்கள். போலிசார் அனைத்தையும் பார்த்தார்கள். நானும் சென்று அங்கு நின்றேன். தர்மலிங்கம், மகாலிங்கம் ஆகியோர் இறந்துகிடந்த இடத்திலிருந்து போலிசார் ரத்தம்படிந்த மண்ணையும், சாதாரண மண்ணையும் தோண்டி எடுத்தார்கள்.

அதற்காக நான் சாட்சி கையொப்பம் செய்தேன். மற்றொரு சாட்சியாக நடராஜன் என்பவர் கையொப்பம் செய்தார். நான் கையொப்பம் செய்த மகஜர் என்னிடம் காட்டப்படுவது தான். அது அ.சா.ஆ.2. ( மகாலிங்கம் என்பவர் இறந்துகிடந்த இடம் சம்மந்தப்பட்டது ). காசிநாதன் என்பவர் இறந்துகிடந்த இடத்திலிருந்து எடுக்கப்பட்ட ரத்தம் தோய்த மண் மற்றும் ரத்தம் படியாத மண் ஆகியவை எடுக்கப்பட்டதற்குரிய மகஜர் அ.சா.ஆ.3. அந்த மகஜரில் நான் முதல்சாட்சியாக கையொப்பம்

செய்திருக்கிறேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**13–ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் ரைஸ்மில்லிலிருந்து திரும்பி வந்தபோது காலை 10.30 மணி இருக்கும். போலிசார் விசாரணையில் நான் முதல்விசாரணையில் சொன்னதுபோல் எதிரிகள் தங்கள் கைகளில் என்னென்ன ஆயுதங்கள் வைத்திருந்தார்கள் என்று சொல்லியிருக்கிறேன். சம்பவஇடத்தில் வைத்து என்னை போலிசார் விசாரித்தார்கள். அப்போது பிற்பகல் 12.00 மணி இருக்கும்.

நான் கையொப்பம் செய்த ஆவணங்களில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று தெரிந்துகொண்டு தான் கையொப்பம் செய்தேன். இரண்டு ஆவணங்களில் கையொப்பம் செய்தேன். போலிசார் இரண்டு இடங்களில் மண் எடுத்தார்கள். ஒன்று மகாலிங்கம் இறந்துகிடந்த இடம். மற்றொன்னு காசிநாதன், தர்மலிங்கம் ஆகியோர் இறந்து கிடந்த இடம். மூன்று இடங்களில் போலிசார் மண் எடுத்தார்கள்.

நான் சொன்ன நாள், நேரத்தில், இடத்தில் வைத்து போலிசார் எந்த சொத்துக்களையும் கைப்பற்றவில்லை என்றாலும், நான் காவல்நிலையத்தில் வைத்து போலிசார் கேட்டுகொண்டதற்கிணங்க கையொப்பம் செய்துகொடுத்துவிட்டு போலிசார் சொல்லிகொடுத்து பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

**8 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் பகல் 11.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள். அங்கு வைத்து தான் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். எனக்கு நேரில் எதுவும் தெரியாது என்றாலும், காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட ஆவணங்களில் நான் கையொப்பம் செய்து கொடுத்திருக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**3–ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

கைப்பற்றுதல் மகஜர்கள் பிற்பகல் 12.00 மணிக்கு எழுதப்பட்டது. மகஜர்களை மீன்சுருட்டி காவல்நிலைய போலிசார் தான் எழுதினார்கள். நான் பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

6 ஆம் எதிரி தரப்பில் மேற்கண்ட குறுக்குவிசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

எதிரிகள் 1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 ஆகியோர் தரப்பில் வழக்கறிஞர் திரு.நாராயணன் இன்று வக்காலத்து தாக்கல் செய்து ஆஜர்.அவர் குறுக்குவிசாரணைக்கு தயாராக இல்லை. எனவே அவர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

மறுவிசாரணை இல்லை.

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.